# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 483/2010

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 6 /PW- 4 |
| Name | : திரு. இரவி |
| Father/Husband's Name | : பழனிவேல் |
| Village | : நெ.3, பாக்கியம்மாள் நகர் |
| Taluk | : பிள்ளையார் கோயில் தெரு |
| Caste | : சென்னை |
| Calling | : |
| Religion | : |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2026.

Accused produced from custody.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னையில் வண்டியில் டிபன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சியிடம் பார்வை மகசர் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **அந்த கையொப்பம் மட்டும் அதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 17.03.2009 அன்று பகல் 02.00 மணியளவில் மடிப்பாக்கத்திலுள்ள ஐசிஐசிஐ வங்கியிடம் வைத்து மேற்படி கையொப்பத்தை போட்டேன். அன்றைய தினம் நான் வண்டி கடை போடவில்லை சாப்பிடுவதற்காக மேற்சொன்ன இடத்திற்கு வந்திருந்தேன். அப்போது அங்கு போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு நான் எதற்காக நிற்கிறார்கள் என்று பார்த்த போது போலிசார் அங்கு படம் வரைந்து கொண்டிருந்தார்கள். காவல் ஆய்வாளர் என்னிடம் ஒரு கையொப்பம் செய்யுமாறு கேட்டார் அதனால் செய்தேன். என்னுடம் இரங்கநாதன் என்பவரும் கையொப்பம் செய்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் நான் படிக்கவில்லை. எனது வாக்குமூலத்தை நான் சம்பவயிடத்தில் கொடுத்தேனா அல்லது காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் சம்பவயிடத்தில். எனது வாக்குமூலம் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது நான் சம்பவயிடத்தில் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவது பொய் என்றாலும் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் இல்லாததால் தான் வங்கியின் பெயரை மாற்றி கூறியுள்ளேன் என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் போலிசாருக்கு கையிருப்பு சாட்சி அதனால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.